# பொலநறுவைக்கால சைவநாயன்மார் வெண்கலப்படிமங்கள் காட்டும் ஈழத்து வார்வைக் கலைமரபு

செ.கிருஷ்ணராஜா


**ஆய்வுச்சுருக்கம்**

*மத்திய காலத்து ஈழத்து வெண்கலப்படிமக்கலைவரலாற்றில் பௌத்தமும் இந்துமதமும் சமத்துவமான செல்வாக்கினை செலுத்தியிருந்தமையை அண்மையகாலத்துத் தொல்லியல் ஆய்வுகள் வெளிப்படுத்தி வருகின்றன. சமுத்திரவியல் செல்வாக்கிற்குட்பட்டிருந்த இத்தீவினது கலைக்கூடங்களில் இவ்விருமதங்களினாலும் உருவாக்கப்பட்டிருந்த கலைக்கோலங்கள் தனித்துவமான வகையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அவ்வழியே பொலனறுவையில் உருவாக்கப்பட்டிருந்த சைவநாயன்மார் வெண்கலப்படிமங்களும் ஈழத்திற்கேயுரிய கலை மரபினை இனங்காண்பதற்குரிய ஓர் ஊடகமாக அமைந்து கொண்டமை பற்றியே இச்சிறிய கட்டுரை ஆராய்கிறது.*


## அறிமுகம்

இலங்கைத் தீவின் கலையும் அதன் வடிவமைப்பும் சுதேச மரபலகுகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட வகையில் வளர்ச்சி பெற்றிருந்த வரலாற்றை பொலநறுவைக்காலக் கலைச் செல்வங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அனுராதபுரகால இலங்கையின் ஆட்சியமைப்பும் அதன் பின்னணியில் உருவான கலைகளின் வளர்ச்சியும் பெருமளவிற்கு வட இந்திய தென்னிந்தியப் பேரரசுகளினது செல்வாக்கிற் குட்படுத்தப்பட்ட வகையில், கலையாக்கங்களும் அப்பேரரசுகளினது கலைக்கூடங்களினால் உந்தப்பட்டிருந்த வகையைக் காணமுடிந்தது. மௌரியர் கலைமரபுகள், சாதவாஹனர் கலைமரபுகள், குப்தர்காலத்து கலைமரபுகள், காஞ்சிப் பல்லவர்களது கலைமரபுகள் என்றவாறாக அனுராதபுரம் தலைநகராக விளங்கிய காலத்து இலங்கையினது கலைகள் வடஇந்திய, தென்னிந்திய கலைச் செல்வாக்கினை உள்வாங்கி வெளிப்படுத்தி நின்றன.[1] ஆனால் பொலநறுவைக்காலத்து கலைகளின் வடிவமைப்பானது பெருமளவிற்குச் சுதேசிய மரபுகளைத் தழுவிய வகையில் வளர்ச்சியடைந்தமையைக் காணமுடிகிறது. "ஒரு குட்டிப் பேரரசாக" பொலனறுவைக்கால இலங்கையின் அரசியல் கட்டமைப்பு முறை, நிர்வாக பொருளாதார வளர்ச்சி நிலைகள் ஆகியன தோற்றுவிக்கப்பட்டமையின் பின்னணியில்[2] கலையாக்கங்களிலும் சுதேச மரபுகளின் வெளிப்பாட்டை காணமுடிந்தது. இக்காரணத்தினாலேயே பொலநறுவைக்கால இந்துக்கலை வடிவங்களின் வெளிப்பாட்டில் தென்னிந்திய சில்ப விதிமுறைகள் ஓரள்விற்கு மீறப்பட்ட வகையில் அல்லது புறக்கணிக்கப்பட்ட வகையில் இலங்கைக்கேயுரிய சுதேசக்கலை விழுமியங்கள் வெளிக்கொணரப்பட்டிருந் தமையைக் காண்கின்றோம்.

இவ்வாறான தனித்துவமான கலை வெளிப்படுத்துகைக்கு ஏற்ற ஊடகமாக அமைந்த ஓர் அம்சமாகக் காணப்பட்ட வெண்கல வார்ப்புக்கலை மரபில் சைவம், சாக்தம், வைணவம் என்ற முப்பெரும் பிரிவிற் குரிய பிரதான கடவுளர் வடிவமைப்பிற்கு அப்பால் நாயன்மார், ஆழ்வார்களது வெண்கலப் பிரதிமை வடிவமைப்பானது பொலனறு வைக்கால சுதேச கலைவடிவமைப்பாளர்க ளுக்கு நன்கு பிடித்தமான தொழிலாயிற்று. ஏனெனில் ஆகம, சில்ப விதிமுறைகளில் இக்குறிப்பிட்ட வடிவங்களுக்குரிய வரையறுக்கப்பட்ட தால அளவுகள் கொடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதனா லாகும். இதனாலேயே சைவநாயன்மார்களது வெண்கலப்பிரதிமை உருவாக்கலிலும், வடிவமைப்பிலும் இலங்கைக்கேயுரிய தொழினுட்பம் நன்கு பயன்படுத்தப்பட்டமை யைக் காண்கின்றோம். பொலநறுவைக்கால சமூக, சமய வளர்ச்சி நிலைகள் அத்தனித்து வமான தொழினுட்பத்திறனை வளர்த்தெடுப் பதற்கேற்ற சூழ்நிலையை வழங்கியிருந்தது என்றால் அது மிகையில்லை.

### நாயன்மாா்களது படிமங்களும் கண்டு பிடிப்பும்

இலங்கைத்தீவினைப் பொறுத்தவரையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலமே சுதேச கலை, பண்பாட்டு, அறிவியல்துறைகள் பொறுத்த ஆய்வு முயற்சிகள் தொடக்கிவிடப்பட்ட ஒரு காலப்பரப்பாக அமைந்தமையைக் காணலாம். 18ஆம் நூற்றாண்டு முடிவில் H.C.P. பெல் என்றழைக்கப்பட்ட ஆங்கிலேய தொல்லிய லாளரே அப்பணிகளை ஆரம்பித்து வைத்தார்.[3] அனுராதபுர மாவட்டம், பொலநறுவை மாவட்டம் ஆகிய பிரதேசங்களில் அவரால் மேற்கொள்ளப் பட்ட மேலாய்வுகள், அகழ்வாய்வுகள் ஆகியவற் றின் விளைவாக அழிந்துபோன இந்துக் கோயில்கள், சிற்பங்களின் உடைந்த பாகங்கள், வெண்கல உலோகச் சிற்பங்கள், கல்வெட்டுக் கள் ஆகியன பரவலாகக் கண்டு பிடிக்கப்பட்ட ன. பொலநறுவையில் 13 சிவதேவாலயங்களை பெல் அகழ்ந்து வெளிப்படுத்தியிருந்தார்.[4] இவற்றுள் முதல் ஐந்தும் சிவன் கோவில்களாக வும் மற்றைய ஏழும் விஷ்ணு கோயில்களாகவும், ஒன்று காளிகோயிலாகவும் அடையாளம் காணப்பட்டன. இந்த இந்துக்கோவில்கள் சூழ்ந்த பிரதேசங்கள், சுற்றாடல்கள் மீண்டும் மீண்டும் தொல்லியல் திணைக்களத்தினாலும், தொல்லியலாளர்களினாலும் அகழ்வாய்வுக் குட்படுத்தப்பட்டன.[5] 1960களிலும், அதன் பின்னர் மீண்டும் 1970இலும் அவை அகழ்வுக்குட்படுத்தப்பட்டன. 1970களிலிருந்து கலாசாரமுக்கோண வலயமான கண்டி – பொலனறுவை – அனுராதபுரம் ஆகிய முக்கோணப் பரப்பு யூனெஸ்கோவின் ஆதரவுடன் அகழ்வாய்வு, மேலாய்வுகளுக்குட்படுத்தப் பட்டமையைக் காண்கின்றோம். இவற்றின் விளைவாக எண்ணிக்கையில் அதிகமான இந்து வெண்கல, கற்சிற்ப, உலோகப்படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவையும் கொழும்பு தேசிய அரும்பொருளகத்திலும், அனுராதபுர அரும்பொருளகத்திலும், அகழ்வாய்வுத் தலங்களிலுள்ள அரும்பொருளகங்களிலும் வைத்துப் பாதுகாக்கப்பட்டன.[6] விநாயகர், சிவன், நடராஜர், பார்வதி, விஷ்ணு, சூரியன், அர்த்தநாரீஸ்வரர் எனப் பலதரப்பட்ட இந்து வெண்கலப்படிமங்களும் அவற்றுள் உள்ளடங்கும். இவற்றைவிடத் திருகோண

மலை, மன்னார், திரியாய், கந்தளாய், பதவியா, யாழ்ப்பாணம் ஆகிய மையங்களிலிருந்தும் தற்செயல் நிகழ்வுகள் காரணமாக இந்து வெண்கலப் படிமங்கள், சிற்பங்கள் என்பன கிடைத்துள்ளன.[7] ஆனால் சைவநாயன்மாரது வெண்கலப் படிமங்கள் கிடைத்த ஒரேயொரு மையமாகக் காணப்படுவது பொலனறுவையே ஆகும். சோழர் அரசாட்சிக் காலகட்டத்தில் ஈழத்தில் உருவாக்கப்பட்ட அப்படிமங்கள் தென்னிந்தியாவில் கிடைத்தவற்றிலிருந்து முற்றிலுமே தனித்துவம் வாய்ந்த வகையில், அவற்றின் கலையம்சங்கள் தனித்துவப்படுத்தப்பட்ட வகையில் அமைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். கிடைத்த சைவநாயன்மார் வெண்கலப்படிமங்களுள் பெரும்பாலானவை பொலனறுவையிலுள்ள ஐந்தாம் சிவதேவாலயத்திலிருந்தே அகழ்வின்போது வெளிப்படுத்தப் பட்டிருந்தன.[8] இவ்வெண்கலப்படிமங்கள் யாவும் தலைகீழாக, திட்டமிட்ட வகையில், அவசர அவசரமாக, பாதுகாப்பின் நோக்கத்திற்காக, புதைக்கப்பட்டிருந்த வகையை அகழ்வின்போது நன்கறியமுடிந்தது. மீண்டும் தோண்டி எடுக்கப்படும் பொழுது அப்படிமங்களின் சிரசில் இடையூறுகள், காயங்கள் ஏற்படா வண்ணம் இருப்பதற்காகவே அவ்வாறு மக்களால் புதைக்கப்பட்டிருக்கலாம் எனத் தொல்லியலாளர் கருதுகின்றனர்.[9] கி.பி 13ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புதைக்கப்பட்ட இந்து வெண்கலப்படிமங்கள் அப்பிரதேசத்தில் வாழ்ந்த இந்து மக்களது நிரந்தரமான இடப்பெயர்ச்சியுடன் அவை மீண்டும் மீட்கப்படுவதற்குரிய சந்தர்ப்பத்தினை இழந்திருந்தன. பின்னர் கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலிருந்து 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரைக்கும் உள்ள ஒருகால இடைவெளியிலேயே அவை யாவும் மீட்டெடுப்பதற்குரிய சூழலைப் பெற்றுக் கொண்டிருந்தன. றோயல் ஏசியாற்றிக் சொசைற்றி என்று அழைக்கப்பட்ட ஆங்கில ஆய்வு இதழின் இலங்கைப் பிரிவில் இக்கண்டு பிடிப்புக்களின் விபரமும் முக்கியத்துவமும் பிரசுரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.[10]



Karaikkal Ammaiyar

| சைவ நாயன்மார் பெயர் | கண்டுபிடித்த மையம் | கண்டுபிடித்த ஆண்டு | தேசிய அரும் பதிவு இலக்கம் – கொ–அனு | உயரம் | பீடத்தின் விபரம் | படிமத்தின் நிலை |
|---|---|---|---|---|---|---|
| சுந்தரமூர்த்தி | 5ஆம் சிவாலயம் | 1907 | 13.98.285 | 60cm | இரட்டைத் தாமரை மலர்ப்பீடம் | துவிபங்கநிலை |
| சுந்தரமூர்த்தி | 5ஆம் சிவாலயம் | 1907 | 13.99.285 | 53cm | | |
| அப்பர்சுவாமி | 1ஆம் சிவாலயம் | 1907 | 13.103.286 | 58cm | இரட்டைத் தாமரை மலர்ப்பீடம் | சமபங்கநிலை |
| அப்பர்சுவாமி | 1ஆம் சிவாலயம் | 1907 | 13.104.286 | 55cm | இரட்டைத் தாமரை மலர்ப்பீடம் | துவிபங்கநிலை |
| மாணிக்கவாசகர் | 1ஆம் சிவாலயம் | 1907 | 13.101.286 | 54cm | இரட்டைத் தாமரை மலர்ப்பீடம் | திரிபங்கநிலை |
| திருஞானசம்பந்தர் | 5ஆம் சிவாலயம் | 1907 | 13.102.286 | 48cm | தாமரை மலர்ப்பீடம் | சமபங்கநிலை |
| சண்டிகேஸ்வரர் | 5ஆம் சிவாலயம் | 1907 | 13.100.286 | 73cm | தாமரை மலர்ப்பீடம் | சமபங்கநிலை |
| சண்டிகேஸ்வரர் | 5ஆம் சிவாலயம் | 1960 | No. 382/அனு | 74cm | இரட்டைத் தாமரை மலர்ப்பீடம் | சமபங்கநிலை |
| காரைக்காலம்மையார் | 5ஆம் சிவாலயம் | 1960 | No. 385/அனு | 28cm | | |
| சிவபக்தர் சோழலங்கேஸ்வரன்? | பதவியா | 1960 | No. 386/அனு | 70cm | இரட்டைத் தாமரை மலர்ப்பீடம் | சமபங்கநிலை |

**நாயன்மார் படிமங்களின் உலோக வார்ப்பு முறை**

பொதுவாக சிற்பசாஸ்திர மரபுகள் இரண்டுவகையான உலோகவார்ப்பு முறையைச் சித்தரிக்கின்றன. இலங்கையிலிருந்து கிடைக்கப்பெற்ற 'ரூபபாலிய' என்ற சில்ப இலக்கண நூலும் இவ்விருவகையான உலோக வார்வை முறையினை எடுத்து விபரிப்பதனைக் காணலாம்." வெண்கலப் படிமங்களின் உருவாக்கத்தில் Lost - Wax System எனப்படும் பூரணஉள்நிரம்பல் முறையிலான ஒரு செயன் முறையே பெருமளவிற்குப் பின்பற்றப்பட்டு வந்தமையைக் காணமுடிகிறது. பூரண உள் நிரம்பல் முறையில் அமைந்த வெண்கலப் படிமங்களை உருவாக்கும்போது முதலில் மெழுகினால் உருவகிக்கப்பட்ட குறிப்பிட்ட படிமத்தின் தால, பங்க, ஹஸ்த ஒழுங்குகளை சில்ப சாஸ்திர மரபுகளுக்கமைய ஸ்தபதி சீர்செய்துவிடுவார். அதன் பின்னரே அரைத்துப் பிசையப்பட்ட புற்றுமண் கொண்ட களிமண்ணி னால் அம்மெழுகுப்படிமத்தினை முழுவதுமாக அப்பி, மூடிக்கடினமாகும் வரைக்கும் வெயிலில் உலர வைத்து விடுவர். இரு துவாரங்கள் மிகச்சிறியளவில் அவ்வுருவின் உச்சியிலும், பாதப்பரப்பிலும் ஏற்படுத்தி, பஞ்சலோகக் குழம்பின் உருகிய பாகுபோன்ற திரவத்தினை உச்சியிலுள்ள சிறிய துவாரத்தின் வழியாக உட்செலுத்துவர். அப்போது உள்ளேயிருக்கும் மெழுகினாலான படிமம் சூட்டின் காரணத்தி னால் உருகிக் குழம்பாகி, பாதப்பரப்பிலுள்ள துவாரத்தின் வழியாக வெளியேறிவிடும். அதன் பின்னர் உள்நிரம்பிய பஞ்சலோகக் குழம்பு இறுகிக்கெட்டியாக மாறியவுடன் அதன் புறத்தே அமைக்கப்பட்டிருந்த மண்ணாலான பரப்பு உடைத்து நீக்கப்பட்டு, உள்நிரம்பல் முறை மூலம் உருவாக்கப்பட்ட சிற்பபடிமம் வெளிக்கொண்டு வரப்படும். பொலநறுவையி லிருந்து அகழ்ந்து, மீட்டெடுக்கப்பட்ட சைவ நாயன்மார் வெண்கலப்படிமங்கள் யாவும் இம்முறையின் அடிப்படையிலேயே உருவாக்கப் பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இவை ஒவ்வொன்றும் உயரத்தாலும், நிறையாலும், அழகியல் தோற்றப்பாட்டிலும் தனித்துவமாக அமைந்தவையாகக் காணலாம்.

**1. சுந்தரமூர்த்தி நாயனார் வெண்கலப்படி மம் C.M.R.No 13.98.285)**

புலைநரி, ஜனநாதமங்களம், புலத்திநகர் எனப் பலவாறாக அழைக்கப்பட்ட பொலனறு வையிலிருந்து அகழ்ந்து மீட்கப்பட்ட சைவநா யன்மார் படிமங்களில் மிகவும் தலைசிறந்த அழகியலுணர்வையும், அலங்காரச் சிறப்பினை யும் ஒருங்கே கொண்ட நிலையில் வடிவமைக்கப் பட்ட சுந்தரரது படிமம் தனித்துவமாக ஆராயத் தக்கதாகும். கொழும்பு தேசிய அரும் பொருளகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சுந்தரரது வெண்கலப் படிமமானது தென்னிந் திய மேலைத்தேய கலாவல்லுனர்களையே ஒருங்கே தன்பால் ஈர்த்துள்ளது என்றால் அது மிகையாகாது.[12]

**வர்ணனை :**

மிகவும் அலங்கரிக்கப்பட்ட கழுத்தாபரண ங்களுடனும், முப்புரிநூலுடனும் துவிபங்க நிலையில் வடிவமைக்கப்பட்ட சுந்தரரது பிரதிமையானது 'சுந்தரர்' என்ற பெயருக்கேற்பவே பொருளமைதி யுடன் வெளிப்படுத்தப்பட்ட விதமானது இவ் விலங்கைக்குரிய வெளிப்பாட்டை தென்னிந்தி யாவின் அதே வகையான உதாரணங்களிலி ருந்து தனித்துவப்படுத்தியிருப்பதனைக் காண்கின்றோம். வட்டமான இரட்டைத் தாமரையிதழ் பீடமொன்றின் மீது இடது காலை சற்று முன்னோக்கி முழங்காலுக்கண்மையில்

மடித்துள்ள வகையில் 53 சென்ட்ரிமீட்டர் உயரத்தினையுடையதாக இப்படிமம் உருவாக்கப் பட்டுள்ளது. இப்படிமத்தின் பீடச்சிறப்பு என்னவென்றால் பத்மாசனத்தினைத் தாங்கியவகையில் மேலுமொரு சதுரமான (பத்திராசனம்) ஆசனமொன்று தாமரை மலர் அலங்காரத்துடன் இணைந்த வகையிலும், திருவீதியுலாச் செல்வதற்குரிய நிலையில் இரண்டு பக்கங்களிலும் கொழுக்கிகள் (Hooks) இணைக்கப்பட்டதாகவும் வடிவமைக்கப்பட்ட மையாகும். இருகாதுகளிலும் பத்திரகுண்டலங் களுடன் தோற்றமளிக்கும் இச் சுந்தராரது படிமத்தின்புஜங்களில் கேயூரமும் முழங்கை களில் கைவளையும் கைகளில் கைவளையல் களும் இட்டு அலங்கரிக்கப்பட்டுள்ளது. கரங் களுள் வலது கரம் கடகஹஸ்த முத்திரையுடனும், இடதுகரம் சுஜிஹஸ்த முத்திரையுடனும் காணப் படுகின்றன. தலையலங்காரத்தைப் பொறுத்த வரையில் மேல்நெற்றியின் புறவயமாக மயிர்க்குஞ்சங்கள் தொங்கும் முறையில் வாரப்பட்டுப் பின்னர், பின்பக்கமாக ஒன்று சேர்த்து முடியப்பட்டுள்ளமையைக் காணலாம். இத்தகைய தலையலங்கார முறையானது சுந்தராரது வதனத்தை மிகவும் யௌவனமாக மிளிர்வதற்கு வழிவகுத்துள்ளது. ஆடையலங் கார முறையைப் பொறுத்தவரைக்கும் மிகக் கச்சிதமான ஆடை அணியும் வகை வெளிப் படுத்தப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். பீதாம்பரத்துடன்கூடிய மிகக் குறுகலான ஆடையை (கட்டையான களிசான் போன்றது) இடுப்புப் பட்டையில், இடுப்புப் பட்டியுடன் சேர்த்து அலங்கரித்துள்ளமையைக் காணலாம். இருகால்களிலும் பாதசரம் போன்ற சிலம்புகள் காணப்படுகின்றன. துவிபங்க நிலையில் தோற்றமளிக்கும் இப்படிமத்தின் ஒய்யாரமான நிலைக்கு இடுப்பில் அலங்கரிக்கப்பட்ட ஆடையணிகலன்கள் மிகவும் மெருகூட்டு வதனைக் காணலாம்.

**2. சுந்தரமூர்த்திநாயனார் வெண்கலப் படிமம்** (CMR No. 13.99.285)

பொலநறுவையிலுள்ள 5ஆம் இலக்க சிவதேவாலயத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட மற்றொரு படிமமும் சுந்தரமூர்த்திக்குரியதாகக் காணப்படுகின்றது. கொழும்பு தேசிய அரும்பொருட்காட்சியகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள இப்படிமமும் ஏறக்குறைய முன்னர் விபரிக்கப்பட்ட சுந்தராரது படிமத்தில் காணப்படும் சிறப்பியல்புகளையே கொண்டு ள்ளன.[9]

**வர்ணனை :**

பத்மாசனத்தின் மீது நின்று கொண்டிருக் கின்ற இப்படிமமானது 53 செ.மீ உயரத்தினைக் கொண்டு துவிபங்கநிலையில் காணப்படு கின்றது. கழுத்தாபரணங்கள் மிகவும் அலங்கரிக்கப்பட்ட வகையில் மாலைகளுடனும், மார்பிலே முப்புரிநூலும் (உபவீதமும்) இடுப்பிலே இடைக்கச்சும் காணப்படுகின்றது. தோட்புஜங்க ளில் கேயூரமும். முழங்கைகளில் கைவளையும் கைகளில் வளையங்களும் காணப்படுகின்றன மிகவும் அலங்காரமான பீதாம்பரத்துடன் அல்லது ஒட்டியாணத்துடன் கூடிய ஆடை (கட்டைக்களிசான் போன்ற அமைப்பில்) அணி விக்கப்பெற்றிருப்பதனையும் காணமுடிகிறது.

இருகாதுகளிலும் பத்திர குண்டலம் காணப்படுகின்றது. தலைமயிர் ஒழுங்காகவாரிச் சீவிவிடப்பட்டுப்பின் உச்சியில் இருகன்னப் பகுதியில் முடிச்சிடப்பட்டுள்ளது. இருகால்களி லும் பாதசரமும், சிலம்பும் காணப்படுகின்றன. இரட்டைப்படுத்தப்பட்ட பத்மாசனத்தினைத் தாங்கிய வகையில் சதுரமான பத்திரபீட

மொன்றும் காணப்படுகின்றது. இப்பீடத்தில் வீதியுலாச் செல்வதற்குரிய கொழுக்கிகள் அமையப் பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.[9]

### திருநாவுக்கரசநாயனார் : (CMR No 13.103.286)

பொலனறுவையிலுள்ள முதலாம் சிவதேவாலயத்திலிருந்து அகழ்ந்து வெளிப் படுத்தப்பட்ட வெண்கலப் படிமங்களுள் திருநாவுக்கரசநாயனார் அல்லது அப்பர் சுவாமிகளது படிமமும் ஒன்றாகும். பத்மாசனத்தின் மீது சமபங்க நிலையில் காட்சியளிக்கும் இப்படிமமானது 58 செ.மீ உயரத்துடன் கூடியதாகக் கொழும்பு தேசிய அரும்பொருளகத்தில் பாதுகாத்து வைக்கப்பட் டுள்ளது. பீட அமைப்பினைப் பொறுத்தவரையில் இரு பத்திரபீடங்கள் ஒன்றன் மீது மற்றொன்றாய் அமைந்திருக்க அதன் மீது தாமரையாசனம் (பத்மம்) அமைக்கப்பட்டிருப்பதனைக் காண்கின் றோம்.

**வர்ணனை:**

இருகைகளையும் ஒன்றாக இணைத்து கூப்பியநிலையில் அப்பர் சுவாமிகளது உளவாரத் தண்டு வலது மணிக்கட்டிற்கும் வலது மார்பிற்கும் இடையே 45° குறுக்காக அணைக் கப்பட்டிருப்பதனையும் காண்கின்றோம் எந்தவிதமான அலங்கார வேலைப்பாடுகளும் அற்றநிலையில் கழுத்தும், கைகளும், இடுப்புப் பகுதியும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. கழுத்தில் நூலினால் கோர்க்கப்பட்ட ஒரு தாயத்தினையுடைய நூற்கயிறு கழுத்தோடு மிகவும் இறுக்கமாகக் காணப்படுகின்றது இதற்குக் கீழே இரட்டைப் பட்டில் அமைந்த முத்துமாலையொன்று காணப்படுகின்றது. இரண்டு கைகளின் முழங்கைப் பகுதியில் முத்துமாலை வடம் காணப்படுகிறது. இடுப்பிலே அரைஞாண் கொடியில் கௌபீனம் காணப்படு கின்றது. அரைஞாண்கொடியின் முடிச்சுக் கட்டின் தொங்கல் ஒன்று வலது இடையில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. காதுகள் இரண்டிலும் இருவளையங்கள் தொங்குவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. தலையில் கேசம் காணப்படவில்லை. தலையையைப்பு வழுக்கை முறையில் வடிவமைத்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. நாயன்மார்கள் எல்லோர் மத்தியிலும் அப்பர் சுவாமிகள் வயதாலும் அனுபவத்தாலும் முதிர்ந்தவர் என்பதனை வெளிப்படுத்துவதற்காக இவ்வாறான வடிவமைப்பினை ஈழத்துக் கலைஞன் உருவாக்கியிருக்கக் கூடும்.

### 4. திருநாவுக்கரசநாயனார் (CMR No. 13.104.286)

பொலநனறுவையிலுள்ள முதலாம் சிவதேவாலயத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மற்றுமொரு வெண்கலப்படிமம் திருநாவுக்கரச நாயனார்க்குரியதாக அடையாளம் காணப்பட்டு ள்ளது. 55செ.மீ உயரத்துடன் கூடிய இவ்வெண்கலப்படிமம் இரட்டைப்படுத்தப்பட்ட தாமரைமலர்ப்பீடமொன்றின் மீது துவிபங்க நிலையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்படிமமும் கொழும்பு தேசிய அரும்பொருளகத்தில் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கொழும்பு தேசிய அரும்பொருளகத்தில் பாதுகாத்து வைக்கப்பட் டுள்ள இவ்வெண்கலப் படிமமானது முன்னை யதை விடவும் அலங்காரக் கலைவனப்பினால் மிகக்கூடிக் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. பீடத்தில் திருவீதியுலா வருவதற்காக அமைக்கப் பட்ட நான்கு கொழுக்கிகள் சதுரமான பத்திரபீடத் தின் இரு கரைகளிலும் காணப்படுகின்றன.[6]

**வர்ணனை :**

கைகூப்பிய நிலையில் காணப்படும் இப்படிமத்தில் உழவார அலகுடன் கூடிய தண்டு இடது கரத்திலுள்ள மணிக்கட்டிற்கும், இடது தோட்பட்டைக்குமிடையே 45° சரிவில் வைத்து வடிவமைக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். கழல் வரையிலான நீண்ட காதுகளிலே வட்டமான வளையங்கள் தொங்குகின்றன. கழுத்திலே கழுத்தோடு ஒட்டிய வகையில் மாலைகள் அணியப்பெற்றுள்ள வகையையும், அதன் மீது நீண்ட முத்துவடம் (Oblong Garland) நாபிக்குச் சற்று மேல் எல்லை வரைக்கும் வந்து தொங்குவதாகவும் இப்படிமம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தலையங்காரம் முன்னைய உதாரணத்தை விடச்சிறந்த தாகவும், முகவடம் முகத்தின் பொலிவினை மேலும் மெருகூட்டிக் காட்டுவதாகவும் காணப்படுகின்றது. இடுப்பில் வேட்டித்துண்டு ஒன்று (குறுகலான தோத்தி) கட்டப்பெற்றுள்ள வகையையும், அதன் மீது இடுப்புப்பட்டியொன்று அணியப்பெற்றுள்ள நிலையையும், அதன் முடிச்சுத்தொங்கல் இரண்டும் வலதுபக்க இடுப்பின்பக்கமாக தூங்கவிடப்பட்டிருப்ப தனையும் காண்கின்றோம். இப்படிமத்தின் புயங்களில் கேயூரமும், கைகளில் வளையல் களும் காணப்படுகின்றன. கரங்களில் சிலம்புகளும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

### 5. மாணிக்கவாசகர் : (CMR No. 13.101.286)

பொலநறுவையிலுள்ள முதலாம் சிவதேவால யத்திலிருந்து அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட வெண்கலப்படிமங்களுள் பத்மாசனத்துடன் கூடிய துவிபங்க நிலைக்குரிய மாணிக்கவாசகரது படிமமும் ஒன்றாகக் கிடைத்தது. தலையிலே ஒளிவட்டத்துடன் கூடிய இப்படிமம் 54செ.மீ உயரத்தினையுடையதாகப் பத்திராசனத்துடன் கூடிய இரட்டைத் தாமரையிதழ் மலர்ப்பீடத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பத்திராசனத்தின் இருமருங்கிலும் திருவீதியுலாவிற்காக இணைக்கப்பட்ட கொழுக்கிகளையும் காணலாம். பத்திராசனத்தின் நாற்புறமும் தாமரையிதழ்வடிவம் கோட்டுமுறையில் வரையப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**வர்ணனை:**

அலங்கார நிலையில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக அமைந்துள்ள இப்படிமத்தின் கழுத்தில் நீண்ட முத்துமாலை ஒன்று தொங்கிக் கொண்டிருப்பதனையும், இடது தோட்பட்டை யூடாகச் செல்லும் உபவீதம் (முப்புரிநூல்) அம்முத்துமாலைக்குப் பின்னே காணப்படுவதா கவும் உள்ளது. இடுப்பிலே கட்டப்பெற்றுள்ள தோத்தி அல்லது வேட்டி கீழே முழங்கால் வரைக்கும் அகன்றிருப்பதனைக் காணலாம். இடுப்பிலே தோத்திமீது கட்டப்பட்ட இடுப்புப்பட்டியும் அலங்கார வரைபுகளுடன் காணப்படுவதும் நோக்கத்தக்கது. இப்படிமத்தின் இடதுகரத்தில் பனையோலைச் சுவடிகள் காணப்படுகின்றன. வலதுகரமானது 'விதர்க்க' முத்திரையைக் காண்பிக்கின்றது. கைகள் இரண்டிலும் முத்துமாலைவடம் கட்டப்பட்டிருப்பதனையும் அவதானிக்க முடிகிறது.

### 6. திருஞானசம்பந்தர் : (CMR No 13.102.286)

பொலநறுவையிலுள்ள ஐந்தாம் சிவதேவாலயத்திலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட குழந்தை வடிவிலான நிர்வாணத் தோற்றத்து டன் கூடிய இப்படிமம் திருஞான சம்பந்தருடைய தாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அரையில் காணப்படும் அரைமுடிச்சுதங்கையே அப்படிமத் தின் அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளது.

பத்திராசனத்துடன்கூடிய பத்மாசனமொன்றில் சமபங்கமாக நிற்கும் நிலையில் இக்குழந்தை நாயனார் வடிவமைக்கப்பட்டுள்ளார். இப்படிமத்தின் உயரம்48 செ.மீ ஆகும்.[7]

**வர்ணனை :**

இரட்டை வடத்துடன் கூடிய முத்துமாலை ஒன்று இக்குழந்தை நாயனாரின் கழுத்தினை அலங்கரிப்பதனைக் காண்கின்றோம். இதில் ஒரு பட்டு கழுத்தினை மருவிய வகையிலும், மற்றையது மார்புப் பகுதிவரைக்கும் வந்து நீண்டும் காணப்படுகிறது. இருகரங்களாலும் தாளம் போட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இப்படிமம் சித்தரிக்கப்பட்டுள்ளது. கைகளில் வளையல்களும், முழங்கைகளில் கைவளையும் ஆபரணங்களாக உள்ளன. இடுப்பிலே அரை முடிச் சதங்கைகளைத்தவிர ஆடைகள் எதுவும் அணியப்பட்டிருக்கவில்லை. இரு பிஞ்சுக்கால் களிலும் பாதசரமும், சிலம்புகளும் காணப்படு கின்றன. தலையலங்காரத்தினைப் பொறுத்த மட்டில் கேசம் இன்னும் அடர்த்தியாகக் காணப்படாத நிலையில் மேல்நெற்றிப் பரப்பில் ஓர் ஒழுங்கில் மயிர் வெட்டப்பட்டு, அழகுபடுத்தப் பட்டமை போல் தோன்றுகின்றது. காதுகளைப் பொறுத்த வரையில் இருவட்டமான சிறிய வளையங்கள் தொங்குவதுபோல் உள்ளன. மொத்தத்தில் சமச்சீரான ஒரு குழந்தைக்குரிய தோற்றப் பொலிவில் திருஞானசம்பந்தர் வடிவமைக் கப்பட்டிருப்பது ஈழத் தமிழரது புராணமரபின் தெளிவினை ஆதாரப்படுத்து கின்றது எனலாம்.

**7. காரைக்காலம்மையார் (No.385)**

பொலநறுவையில் உள்ள ஐந்தாம் சிவதேவாலயத்தில் 1960களில் அகழ்ந்த போது மேலுமொரு தொகுதி வெண்கலப் படிமங்கள் கிடைத்தன. அவற்றுள் 28 செ.மீ உயரத்துடன் கூடிய பேயுருத்தோற்றத்தாலான ஒரு வெண் கலப் படிமமும் கிடைத்துள்ளது. பீடங்கள் எதுவுமற்ற நிலையில் கிடைத்துள்ள இருக்கும் தோற்றத்திலான படிமம் இப்பொழுது அனுராதபுரத்திலுள்ள அரும்பொருளகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.[8]

**வர்ணனை :**

எலும்புக்கூடு போன்ற மெலிந்த சரீரத்தையுடைய இவ்வெண்கலப்படிமத்தின் வடிவமைப்பானது மிகவும் தனித்துவம் வாய்ந்ததாகவுள்ளது. இப்பெண்ணுருவின் மார்பகங்கள் ஒடுங்கி, நீண்டு இரு மாட்டுக் கொம்புகள் போன்று தோற்றமளிக்கின்றன. இருக்கும் நிலையில் அக்கொங்கைகள் இரண்டும் ஞாயிக்குக்கீழ் வரை நீட்டப்பட்டிருப்பது ஒரு பெண்வடிவப் பேயுருவினைப் பார்ப்போரு க்கு அச்சமூட்டும் முறையில் அமைக்கப்பட்ட தாகக் கருதலாம். தலையும் கண்களும் அப்பேயுருவினை உறுதிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. கைகள் இரண்டும் தாளங்களைத் தாங்கிய வகையில் ஓர் இசைக்கு தாளசுருதிசேர்க்கின்ற வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளன. கழுத்திலே நீண்டவொரு முத்து மாலையொன்றும் காதுகளில் மிகப்பெரிய வளையங்களும் காணப்படுகின்றன. இடது காலை நன்கு மடித்து அதன் துதிக்காலை ஞாயிவரைக்கும் தொட்டுநிற்கின்ற முறையிலும், வலதுகாலானது நேர்குத்தாக மடித்து வைக்கப் பட்டுள்ள நிலையிலும் இப்பேயுருவின் இருப்பு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒடுங்க இடுப்பின் பாகத்தில் நூல்போன்ற வளையம் ஒன்று காணப்படுகின்றது. முப்புரிநூல் அணிந்து கொண்டிருந்தமைக்கான ஆதாரங்கள் எவையும் தெளிவாக இல்லை.

இருதோட்பட்டைகளிலும் வட்டமான வளையங்கள் போன்ற கோடுகள் காணப்படு

கின்றன. கைகளில் கைவளைகள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில் ஒரு பூதகணத்தின் தோற்றத்தில் காரைக்காலம்மையாரது பேயுருக் கொண்ட தோற்றம் இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதில் சிறிதும் சந்தேகமே இல்லை

## 8. சண்டிகேஸ்வரர் : (CMR No. 13.100,286)

பொலனறுவையிலுள்ள ஐந்தாம் சிவதேவாலயத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட வெண்கல உலோகத்தாலான ஒரு படிமத்தினை சண்டேஸ்வர நாயனார் என அடையாளம் காணப்பட்டு, கொழும்பிலுள்ள தேசிய அரும்பொருளகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. 73செ.மீ உயரத்துடன் கூடிய இப்படிமமானது பத்மாசனத்தின் மீது துவிபங்க நிலையில் நிற்கின்ற கோலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பத்மாசனத்தினை பத்திரபீடமொன்று தாங்கியுள்ளது. திருவீதியுலாவிற்குரிய கம்புத்துவாரங்கள் இரண்டு இப்பத்திரபீடத்தில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

**வர்ணனை:**

இப்படிமத்தின் கைகள் இரண்டும் புஸ்பம் ஒன்றை இறைவனுக்கு நைவேத்தியம் பண்ணும் நிலையில் அமைத்துக் காட்டப்பட்டுள்ளது. தலையலங்காரமானது அழகியமுடி ஒன்றினால் சோபிக்கப்பட்டுள்ளது. இதனை கேசபந்தமாகவும் சிலர் அடையாளம் கண்டுள்ளனர். இரு காதுகளிலும் ஆபரணங்கள் காணப்படவில்லை. தோட்பட்டையில் வீரக்கழல்களும், கழுத்தில் அகன்ற பட்டையாக ஆபரணங்களும், கைகளில் கைவளையும்மிக்க அலங்காரமாகக் காணப்படுகின்றன. இடுப்பில் அழகுபடுத்தப்பட்ட தோத்தி (கட்டைக்களிசான் போன்ற தோற்றத்தில்) அணியப்பட்ட தன்மையையும், இடுப்புப்பட்டி ஒன்று அதனை தாங்கிக் கொண்டுள்ள தன்மையையும் காணலாம். மிகவும் அழகிய தோற்றத்தில் காணப்படும் இப்படிமத்தின் எடுப்பான தோற்றம் அதனை ஓர் அரண்மனைச் செல்வாக்குள்ள ஒருவருக்குரியது என்பதனை மறைமுகமாகச் சுட்டிக் காண்பிக்கின்றது.

## 9. சண்டிகேஸ்வரர் : (No 382)

பொலநறுவையிலுள்ள ஐந்தாம் சிவாலயத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டு, அனுராதபுரம் அரும்பொருளகத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள இன்னொரு வெண்கலப் படிமத்தினையும் சண்டேஸ்வர நாயனாருக் குரியதாக அடையாளம் கண்டுள்ளனர். 74செ.மீ உயரத்தினையுடைய இப்படிமமும் இரட்டைத் தாமரைப் பூவிதழ் ஆசனத்தில் நின்று கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். சமபங்கநிலையில் வடிவமைக்கப்பட்ட இப்படிமத் தின் வட்டமான பத்மாசனத்திலேயே நான்கு கொழுக்கிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த அம்சம் இது வரைக்கும் கண்டுகொள்ள முடியாத ஒரு சிறப்பியல்பாக இப்படிமத்தில் திருவீதியுலாவிற்கான - கொழுக்கிகள் அமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**வர்ணனை:**

இரு கரங்களாலும் வணங்கிக் கொண்டிருக்கும் நிலையில் கைவளையும், வளையல்களும் அணியப்பெற்றதாக இப்படிமம் உருவாக்கப்பட்டுள்ளது. கழுத்திலே மிகவும் அலங்காரமான அணிகலன்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இடுப்பில் ஆடை அணியப் பெற்றுள்ள வகையானது முன்னைய உதாரணத்தைவிட மிகவும் அலங்காரப்படுத்தப்பட்டுள்ள வகையைக் காண்கின்றோம். தலையில் அழகிய வேலைப்பாடுகளாலான மலர்ப்பந்தம் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. மொத்தத்

தில் ஓர் அரண்மனைச் செல்வாக்குமிக்க அதிகாரியொருவரின் தோற்றப்பாட்டிற் குரியதாக இப்படிமம் காணப்படுகிறது.[20]

**10. சிவபக்தன் இலங்கேஸ்வரன் (?)**

பதவியாவிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட பார்வதி வெண்கலச்சிற்பங்களுடன் காணப்பட்ட இப்படிமமானது அதன் உருவவியல் – அலங்கார வேலைப்பாடுகளால் தன்னிகரற்றதாக விளங்கு வதனைக் காண்கின்றோம். 70செ.மீ உயரத் துடன் கூடிய இப்படிமம் சமபங்க நிலையில் இரட்டைத் தாமரையிதழ்ப்பீடத்தில் நின்று கொண்டிருப்பதனைக் காண்கின்றோம். தற்போது இவ்வழகிய படிமமானது அனுராதபுரம் அரும்பொருளகத்தில் பாதுகாத்து வைக்கப்பட் டுள்ளது.[21]

**வர்ணனை :**

இருகரங்களாலும் மலரினை இறைவனு க்கு அர்ச்சிக்கின்ற நிலையில் வடிவமை க்கப்பட்ட இப்படிமம் மேலதிகமான நிறைந்த அலங்கார வேலைப்பாடுகளால் ஆனது. வீரக்கழல்களுடன் காணப்படும் தோட்பட்டை யுடன் இணைந்த வகையில் காதணிகளான மகரகுண்டலங்கள் அமையப்பெற்றுள்ளன. கழுத்தும், கைகளும் ஆபரணங்களினால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று இடுப்பில் ஆடை மேகலையுடனும், இடுப்புப்பட்டி யுடனும் இணைந்த வகையில், பீதாம்பரத்துடன் காணப்படுகின்றன. தலையலங்காரத்தினைப் பொறுத்தவரையில் தனித்துவமான கேசமகுட மொன்று S கொண்டையுடன் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இலங்கையிற் கிடைத்த சிவபக்தர்கள் படிம வரிசையில் பதவியாவிலிருந்து கிடைத்த இப்படிமம் அதன் உடற்கூற்றியல் அடிப்படையிலும், அலங்கார வர்ண வேலைப்பாட்டின் அடிப்படையிலும் சிறப்புற்றிருப்பதனைக் காண்கின்றோம். திட்டவட்டமாக இந்துமதத்திற்கு ஆதரவளித்த ஈழத்து ஆட்சியாளர் வரிசையில் ஒரு மன்னனுக்குரியதாகவே இவ்வெண்கலப்படிமம் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறா யின் இவ்வெண்கலப்படிமத்தினை திருகோண மலையில் ஆட்சி புரிந்த சோழ இலங்கேஸ் வரனுக்குரியதாகக் கொள்ள முடியுமா? சோழ இலங்கேஸ்வரனும் குளக்கோட்டன் என்ற மன்னனும் ஒருவராவர் என்பது அண்மைக்கால வரலாற்றாய்வாளர்களின் முடிபு என்பதும் குறிப்பிடத்தக்கது.

### வெண்கலப்படிமங்கள் பற்றிய ஆய்வுப் பிரயாங்கள்

இலங்கையில் இந்துமதச் சூழற்பரப்பின் பின்னணியில் தோற்றம் பெற்று, வளர்ச்சியடைந்த நுண்கலை வரலாறு இன்னும் பொருத்தமான அணுகுமுறையில் எழுதப்படாதிருப்பது எமது துரதிஷ்டமே ! H.C.P பெல் 1908ஆம் ஆண்டில் வெண்கலப் படிமங்களை அனுராதபுரம், பொலநறுவை ஆகியமாவட்டங்களிலுள்ள காடுகளுக்குள்ளிலிருந்து அகழ்ந்தெடுத்த நிகழ்வுகள் தொடங்கி, இற்றைவரைக்கும் 60க்கும் மேற்பட்ட எண்ணிக்கையான வெண்கலப்படிமங்கள் இந்துமதம் தொடர்பான வையாகக் கிடைத்திருந்தும், அத்துறை தொடர்பான ஆய்வுகளில் இருந்து ஒரு முழுமையான, ஒன்றுதிரட்டப்பட்ட ஈழத்து இந்துப்படிமக்கலை வரலாறு உருவாக்கப்படா திருப்பது என்பது எம்மைப்பற்றி நாமே சிந்திக்காமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்பதனையே காட்டுகின்றது. ஆனால் காலத்திற்குக்காலம் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கிடைத்துவருகின்ற இந்துவெண்கலப் படிமங்கள், சின்னங்கள்

தொடர்பாக அவ்வப்போது விளக்கக்கட்டுரை களை எழுதியதோடு முடித்துவிடுகின்றனர். ஆகையினால் இம்மூலங்கள் யாவற்றையும் ஒன்றாக உள்ளடக்கக்கூடிய வகையில் ஆய்வுப்புலம் தழுவிய முயற்சிக்கு அவற்றைப் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலையே தொடர்ந்தும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.[22]

"தமிழகக்கலை வரலாற்றை எழுதியோர் அதன் ஒரு பாகமாக ஈழத்தின் இந்துக்கலை வரலாற்றைக் கருதாத ஒரு மரபின் பின்னணி யில், இந்திய தென்னிந்தியக் கலை வரலாற்று எழுத்தியலில் மாத்திரமே ஈழத்துக்கலை மரபுகள் தொடர்பாக விசேடகுறிப்புக்களை விட்டுச் செல்வதனைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆனால் ஈழத்துக் கலைவரலாற்றாசிரியர்களின் அணுகுமுறையில் இலங்கையின் கலைவரலாற்று வளர்ச்சியை 1960ஆம் ஆண்டு வரைக்கும் தமிழகத்துடனோ அல்லது தென்னிந்தியாவுடனோ இணைத்துப் பார்ப் பதற்குப் பதிலாக பெருமளவிற்கு வட இந்தியாவுடனேயே ஒப்பிடுகின்ற போக்கு காணப் பட்டிருந்தது. இதனாலேதான் ஆங்காங்கு உதிரிகளாக எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளி லிருந்தும், ஆய்வரங்குகளில் வாசிக்கப்பட்ட கட்டுரைத் தொகுப்புக்களிலிருந்துமே இலங்கையின் படிமக்கலை மரபில் இந்துமதம் கொண்டிருந்திருக்கக்கூடிய பங்கினை அளவீடு செய்ய முடிந்தது. H.C.P பெல், கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, S.பரணவிதான, P.அருணாசலம், கிருஷ்ணஐயர் போன்றோர் ஈழத்தில் அகழ்ந்தெடுத்த, வெளிப்படுத்தப்பட்ட இந்து வெண்கலப்படிமங்கள்யாவும் தென்னிந்தி யாவிலிருந்து காலத்திற்குக் காலம் இங்கு கொண்டுவரப்பட்டு, ஆராதிக்கப்பட்டவையே என்று குறிப்பிட் டுள்ளனர். ஆனால் இன்னொரு வகையான கலாவிமர்சகர்களுள் H.சிம்மர், A.E கொடகும்புர, S.பாலேந்திரா, C. சிவராமமூர்த்தி, கா.இந்திரபாலா, சிறிமல் லக்துசிங்க, கலாநிதி P.புஸ்பரத்தினம் போன்றோர் ஈழத்தில் கண்டெடுக்கப்பட்ட இந்து வெண்கலப்படி மங்களுள் பெரும்பாலானவை சுதேசியக் கலைமையங்களிலிருந்தே உருவாக்கம் பெற்றிருந்தன என விவாதித்துள்ளனர்."[23]

"இலங்கையில் கண்டுபிடிக்கப்பெற்ற புராதன பௌத்த வெண்கலப் படிமங்கள் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டிருந்த எந்தவொரு கலாவிமர்சகரும் அப்படிமங்கள் வட இந்தியாவிலிருந்தோ அல்லது தென்னிந்தியா விலிருந்தோ இலங்கைக்கு எடுத்துவரப்பட்ட என்று குறிப்பிடுவதற்குத் துணியாது கலைப்பாணியை மட்டுமே அங்கிருந்து ஏற்றுக்கொண்டு வார்ப்புமுறையை ஈழத்துக் கலைஞர்களே செய்து முடித்தனர் எனக் குறிப்பிடுகின்றனர். ஆனால் ஈழத்தில் அகழ்ந்து கண்டுபிடிக்கப்பெற்ற இந்துவெண்கலப் படிமங்கள் மட்டும் அண்மைய நாடான தென்னிந்திய – தமிழகப் பரப்பிலிருந்து எடுத்துவரப்பட்டவை, இந்திய சிற்பிகள்– ஸ்தபதிகள் இலங்கையில் தங்கியிருந்து உருவாக்கியவை எனக் குறிப்பிடுவதற்கான அடிப்படைகள் யாவை? பௌத்த வெண்கலப்படி மங்களைப் போன்றோ அல்லது பெரும்பாலான தென்னிந்திய வெண்கலப் படிமங்களைப் போன்றோ இல்லாது இலங்கையில் கண்டுபிடிக்கப்பெற்ற இந்து வெண்கலப் படிமங்கள் பீடத்துடன்கூடிய வீதியுலாத் திருவுருவங்களாகவே வார்க்கப்பட்டிருக் கின்றன என்பதனைக் கூர்ந்து நோக்கும் ஒருவர் அவை தனித்துவமான வகையில் பிராந்தியவேறுபாடு கொண்டிருந்த

இத்தீவிலேயே உருவாக்கப்பட்டவை எனக் கண்டு கொள்வர். பீடத்தின் இருமருங்கிலும் காவுதடிக்கு ஏற்ற அளவுடைய விட்டத்தினை யுடைய துவாரங்களைக் கொண்டுள்ளன வாகவும் வளையங்களையும் (Hooks) கொழுக்கிகளையும் (Hoops) பீடத்தின் இருமருங்கிலும் மேலதிகமாகக் கொண்டிருப் பவையாகவும், வடிவமைக்கப்பட்ட வெண்கலப் படிமங்கள் இலங்கைக்கேயுரிய தனித்துவ வார்ப்புக்களாகக் காணப்படுகின்றன. தமிழகத்து வெண்கலப்படிமங்களை எடுத்து நோக்கினால் அவற்றுள் 10 சதவீதமானவை வீதியுலாவிற்குரிய அமைப்புள்ள வார்க்கப்பட்ட வையாக உள்ளன. இலங்கையைப் பொறுத்த வரையில் கண்டுபிடிக்கப்பெற்ற வெண்கலப்படி மங்கள் யாவுமே வீதியுலாவிற்குரிய வளையங்கள், கொழுக்கிகளுடன் காணப்படு வது தனித்துவமான ஒரம்சமாகும்."[24]

**சுந்தரர் படிமமும் சுதேசக் கலைமரபும் :**

மேலைத்தேய, கீழைத்தேய கலாவிமர்சகர் களை ஒருங்கே தன்பால் ஈர்த்தெடுத்த வெண்கலப்படிமமாகக் காணப்படுவது பொலநறுவையிலிருந்து மீட்டெடுக்கப்பட்ட சுந்தரரது படிமமாகும். கங்குலி தென்னிந்தியா வில் கிடைத்திருந்த சுந்தரர் வெண்கலப் படிமங்கள் யாவற்றுடனும் இலங்கையில் கிடைத்த உதாரணத்தை ஒப்பீட்டு ஆராய்ந்து, அதன் சிறப்பினையும், பிறப்பினையும் இலங்கைக்கேயுரிய தனித்துவமாகக் கொள்வதனைக் காண்கின்றோம்.[25] கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி கூட பொலனறுவையி லிருந்து கிடைத்த சுந்தரரது படிமத்தின் அழகியல் வெளிப்பாடுபற்றி தனித்துவமாக எடுத்துக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.[26] பெயருக்கேற்ற விதத்தில் அதன் அழகியல் வெளிப்பாட்டை ஈழத்து படிமக்கலைஞர் ஈட்டிருப்பது என்பது இலங்கையில் தனித்துவ மாக வளர்ச்சி பெற்றிருந்த வார்ப்புக்கலை மரபின் தனித்துவத்தினையே இனங்காண வைக்கின்றது.

**ஈழத்து உற்பத்தியும் காரைக்காலம்மையார் படிமமும்**

இந்துமதச் சிந்தனைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் சிறப்பாகச் சைவத்துடன் தொடர்புபட்ட மரபுகளுக்கு யதார்த்தமான வடிவமைப்புச் செய்வதில் ஈழத்துக் கலைஞர்கள் கைதேர்ந்தவர்களே! இவற்றிற்குச் சிறந்த உதாரணமாக அமைந்த நாயன்மார் வடிவங்களுள் எமக்குக்கிடைக்கப் பெற்ற ஒரேயொரு பெண்வடிவம் காரைக்காலம்மையார் வெண்கலப் படிமமாகும். ஈழத்து உற்பத்தி எனப்பெரும்பாலான கலைவரலாற்றா சிரியர்களாலும் கலா விமர்சகர்களாலும் விதந்துரைக்கப்பட்ட வெண்கலப்படிமங்களாகக் காணப்பட்டவற்றுள் காரைக்காலம்மையாரது படிமம் இன்றியமையாததாகும். காரைக்காலம் மையாரது அருட்கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சிவன் தனது பக்தையை பேயுருக் கொண்டதாக மாற்றுவித்தார் என்ற புராணச் செய்திக்கு பொலநறுவையிலே வாழ்ந்த கலைஞன் வடிவம் கொடுத்ததன் வெளிப்பாடே இவ்வெண்கலப்படிமமாகும். இதுபோன்றவொரு படிமம் தென்னிந்தியாவிலோ அல்லது சைவப்பண்பாடு பரவிய பிற தேசங்களி லிருந்தோ கிடைக்கவில்லை. இலங்கையில் பொலநறுவையிலிருந்துதான் அப்படிமம் எமக்குக் கிடைத்துள்ளது.[27]

பேயுருக் கொண்ட காரைக்காலம் மையாரது பொருத்தமான உலோகப்படிமம் ஒன்று பொலநறுவையில் இருந்து கிடைத்த

மையானது இலங்கை மீதான மாங்கனிப் பண்பாட்டின் செல்வாக்கையும், சைவசமயத்தின் தத்துவ அடிப்படைகளில் ஈழத்து இந்துக்கள் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டையும் வெளிக்காட்டுவதாக உள்ளது. அற்புதமாகக் கிடைத்திருந்த ஒரு மாங்கனி ஏற்படுத்தியிருந்த திருவிளையாட்டால் தன் அழகிய உடலை பேயுருவாக்கித் தருமாறு இருந்த கோரிக்கையே பேயுருக்கொண்ட வெண்கலப்படி மமாக காரைக்காலம்மையாரை பொலநறு வையிலிருந்து மீட்பதற்கும் அடிப்படையாக அமைந்தது. பேயுருக் கொண்ட காரைக்காலம்மையாரது இப்படிமம் போன்று இதுவரையிலும் எவ்விடத்திலிருந்தும் கிடைத்திருக்கவில்லை என்பதனை நோக்கும்போது இலங்கையானது தனித்துவம் வாய்ந்த இந்து வெண்கலப்படி மங்கள் பலவற்றை காலத்துக்குக் காலம் உருவாக்கி, பிற்சந்ததியினருக்கு கையளித்துச் சென்றமையை உணரமுடிகிறது.

**முடிவுரை**

ஈழத்து இந்து வெண்கலப் படிமக்கலை வரலாற்றில் தெளிவுகாணவேண்டிய பல விடயங்கள் இன்னும் இருந்து கொண்டே உள்ளன. சைவம், சாக்தம், வைணவம் என்ற முப்பெரும் பிரிவுகளுக்குரிய வெண்கலப்படிமங்களும் கற்சிற்பங்களும் ஈழத்தில் ஒரே பிரிவிற்குள்ளேயே மக்களது வாழ்க்கை முறையில் உள்ளடக்கப்பட்டமையைக் காண்கின்றோம். இந்துக்கோயில் என்ற ஒரே கூரைக்குள் அம்முப்பெரும் பிரிவிற்குரிய வழிபாட்டு மரபுகள் இங்கு வளர்ச்சி கண்டிருந்தன. இக்காரணத்தினால் ஈழத்து இந்துப்படிமக்கலை வளர்ச்சியிலும் தனித்துவமானதொரு போக்கினையே காணமுடிகிறது. கண்ணகி அல்லது பத்தினி வெண்கலப் படிமம் கூட கந்தளாயிலிருந்து எமக்குக்கிடைத்துள்ளது. ஆகவே சைவப் பண்பாட்டு மரபில், ஈழத்தில் உருவாக்கப்பட்ட சைவநாயன்மார் வரிசையில் தெளிவாக அடையாளங்காண வேண்டிய படிமங்கள் உள்ளன. சண்டேஸ்வரர் படிமங்கள் என இங்கு குறிப்பிடப்பட்ட படிமங்கள் மீண்டும் மீளடையாளம் காணலிற்குட்படுத்த வேண்டிய தேவை ஒன்றுள்ளது. ஏனெனில் அவை இரண்டுமே சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுத்த இரு அரசர்களுடைய பிரதிமைகளாகும். தமிழகத்தில் அவ்வாறான பிரதிமைகள் பல அண்மைக்காலங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளன. நாமும் இங்கு அவற்றை மீளாய்வு செய்து சைவநாயன்மார் படிமக்கலை வரலாற்றுக்கு புது மெருகூட்டுவோமாக!